செ.வெ..எண்.41 நாள்- 17.07.2017.

கரூர் மாவட்டத்தில், குளித்தலை, நகரளவை ஆவணங்கள் இணையவழி செய்யும் திட்டமானது 5.07.2017 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பொது மக்கள் தங்களுக்கு சொந்தமான நிலத்தின் பட்டாவை தங்களது பெயரில் மாறுதல் / உட்பிரிவு செய்து தனிப்பட்டா பெற்று கொள்வதற்காக சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று விண்ணப்பத்தினை கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அவரவர்கள் குடியிருக்கும் பகுதிக்கு மிக அருகாமையில் உள்ள புதுவாழ்வு திட்ட கிராம வறுமை ஒழிப்பு மையம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம், அரசு கேபிள் டிவி நிறுவனம், எல்காட் நிறுவனம் இவைகளில் ஏதாவது ஒரு அரசு பொது சேவை மையத்தில் (Common Service Centre) தங்களது பட்டா மாறுதல் மனுவுடன் உரிய பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை இணைத்து கொடுத்து, அதே மையத்திலேயே தங்களது பட்டா மாறுதல் உத்திரவினையும் பெற்றுக்கொள்ளலாம். C.S.C மையத்தின் விவரங்களை கரூர் மாவட்டத்தின் இணையதள வழியில் WWW.Karur.nic.in வாயிலாகவும் தெரிந்து கொள்ளலாம். பொது மக்கள் பட்டா மாறுதலுக்காக வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு நேரிடையாக செல்ல வேண்டாம் என்றும் பொது சேவை மையத்தின் மூலம் பட்டா மாறுதல் / உட்பிரிவு செய்து தனிபட்டா பெற்று கொள்ளலாம் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவிக்கின்றார்.

வெளியீடு. செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்